# ஹபுதளை பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூன் 04 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ஹபுதளை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) மீளாய்வாண்டு ஜனவரி மாதம் தொடர்பான ரூபா 236,486 இற்கான நீதிமன்ற தண்டப்பண வருமானம் முன்னைய ஆண்டிற்கான நிலுவை வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 236,486 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அரச நிதி திணைக்களத்திலிருந்து 2010 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்கள் தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 67,545 உம் மற்றும் ஊவா மாகாண சபையில் இருந்து 2013 நவம்பர் மாதம் தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 340,955 இற்கான முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானங்கள் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 408,500 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய 10 % தடுத்து வைத்தல் பணம் ரூபா 63,210 இனை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர்களின் பெறுமதி ரூபா 63,210 இனால் மிகையாகவும் மற்றும் திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்களின் பெறுமதி அதே தொகையால் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நிலையத்தில் முறை சாராத விதமாக காணப்படும் கழிவுப் பொருட்கள் இயந்திரம் ஒன்றின் மூலம் அகற்றும் வேலைக்காக ரூபா 261,110 தொகையொன்று மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதற்காக ரூபா 261,110 தொகைக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோரின் பெறுமதி ரூபா 261,110 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டின் போது அகற்றப்பட்டிருந்த ரூபா 19,810 இற்கான பண்டங்களின் பெறுமதி திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் எனினும், மீளாய்வாண்டிற்கான செலவு விடயங்களுக்கு வரவு வைத்திருந்தமையால் ஆண்டிற்கான பற்றாக்குறை மற்றும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 19,810 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) தியதலாவ வர்த்தக தொடர் கட்டட நிர்மாணிக்கும் முதலாம் கட்டடத்திற்காக சபையினால் உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து கடன் தொகை தொடர்பாக 2013 – iv ஆம் காலாண்டிற்காக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 193,157 தொகைக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளும் போது திரண்ட நிதியக் கணக்கு வரவு வைத்து கடன்கொடுத்தோர் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டும் எனினும் ஆண்டிற்கான செலவுத் தலைப்பு ஒன்றிற்கு வரவு வைத்திருந்தமையால் ஆண்டிற்கான பற்றாக்குறை அதே பெறுமதியினால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(எ) தியதலாவ வர்த்தக தொடர் கட்டடத்தில் இரண்டாம் கட்ட நிர்மாண வேலைக்காக சபையினால் உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தொகை தொடர்பாக 2014 திசெம்பர் மாதத்திற்காக செலுத்த வேண்டிய வட்டித் தொகையாகிய ரூபா 70,000 இனை இரண்டு தடவைகள் கணக்கீடு செய்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை மற்றும் வருட இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதி ரூபா 70,000 வீதம் நிதிக் கூற்றுக்களில் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணம் தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 32,928 இற்கான கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணித்துக் கணக்கீடு செய்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 32,928 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,825,984 ஆக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 27,808,043 ஆகும்.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------------------------

சபையில் சேவையாற்றிவிட்டு இடமாற்றம் பெற்றுள்ள மற்றும் சேவை விட்டுச் சென்றுள்ள 11 ஊழியர்களிடம் 2007 முதல் 2011 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 54,562 இற்கான பதவியணிக் கடனை இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6 மற்றும் 4 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,538 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,636,694 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 6,586,156 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

-------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான பில் போடப்பட்ட வருமானம் ரூபா 2,430,234 ஆகக் காணப்பட்டதுடன் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 507,090 ஆக காணப்படாமையால் அவை பில் போடப்பட்ட வருமானத்தில் நூற்றிற்கு 21 ஆகும்.

2.2.2 வீதவரி

-----------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதவரி அறவிடப்படக் கூடிய ஆதனங்களை 2004 ஆண்டின் பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

2.2.3 வாடகை

-------------

உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 39 கடைகள் தொடர்பாக மாதாந்த வாடகையை தலைமை பெறுமதி மதிப்பீட்டாளர் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்துடன் தொடர்புடைய பெறுமதி மதிப்பீட்டாளர் மூலம் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.4 ஏனைய வருமானங்கள்

-----------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் தொலைத் தொடர்பு டவர்கள் நடத்துவதற்காக துணை விதிகள் ஆக்கப்பட்டு கட்டணங்கள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன், அதிகாரப் பிரதேசத்தில் 08 இடங்களில் அவ்வாறான டவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த தொகை பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 511,069 |
| முத்திரை கட்டணம் | 3,151,724 |
| | 3,662,793 |

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

தியதலாவ வர்த்தக தொடர்கட்டடம் நிர்மாணிக்கும் முதலாம் கட்டத்திற்காக உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 2010 செப்டம்பர் 17 திகதி பெற்றிருந்த ரூபா 6,800,000 கடன் தொகைக்காக 2013 திசெம்பர் 30 முதல் 2014 திசெம்பர் 30 வரையான காலப் பகுதியில் செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,541,690 இற்கான 05 கடன் தவணைப் பணத்தினை 2015 பெப்ரவரி வரையும் செலுத்தியிருக்கவில்லை

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

----------------------------------------------------

சபைக்குச் சொந்தமான மிட்சுபிசி வகையைச் சேர்ந்த கப் வண்டி ஒன்று மற்றும் கை டிரக்டர் ஒன்று திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது முறைப்படி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு